808

உ

சிவமயம்.

# ஸ்ரீ பழநி க்ஷேத்திர வரலாறும் பாடல் திரட்டும்.



8 AUG 1933
MADRAS

**Published by:**

**P. NATARAJA PANDARAM,**

**MALAIKOVIL AYAN MIRAS,**

**PALNI.**

**Printed at R. M. K. Press, Palni.**

REGISTERED RESERVED.

**3rd Edition.**

Cents.] 1933 [Price As. 2.

Q26'.38.2119SPA
N33
172435



ஸ்ரீ பழநியாண்டவருக்கு அபிஷேகமான அருட்பிரசாதங்கள், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி அடங்கிய செட் 1-க்கு தபாற்செலவுள்பட ரூ. 2—8—0.

8 AUG 1933
MADRAS

உ

சிவமயம்.

ஸ்ரீ கணபதி துணை.

# பழநி க்ஷேத்திர வரலாறு.

ஸ்ரீ முருகக் கடவுள் கலியுகப் பிரத்யக்ஷ தெய்வம் என்பதும் தமிழர்கள் குலதெய்வமென்பதும் தமிழுக்குளெல்லையாகிய வேங்கடம் முதல் குமரி ஈறாக உள்ள பல சுப்பிரமணிய ஸ்தலங்களுள் முக்கியமான படைவீடு ஆறனுள் மூன்றாவதாகிய திருவாவினன்குடி என்னும் பழநித்தலம் மிக்க விசேடமுடையது என்பதும் பிரசித்தம். இத்திருவாவினன்குடியின் வரலாறு இங்கு வெகு சுருக்கமாக கூறப்படுகிறது.

திருவாவினன்குடி:— கைலயங்கிரியில் சிவபெருமானைச் சகல தேவர்களும் தரிசிக்குங்கால் பாதகாணிக்கை வைத்துத் தரிசித்தல் போல், ஒருநாள் கலகப் பிரியராகிய நாரதர் நவரசமணிகள் நிறைந்துள்ள ஓர் மாதுளங்கனியை இறைவனுக்குச் சமர்ப்பித்துவணங்கினர். கனியை கணபதியும் கந்தனும் விருப்புடன் நோக்கினர். இதையறிந்த பார்வதி பரமேஸ்வரர்கள் ஒரு திருவிளையாடற்செய்யக் கருதி உலகை ஒருநொடியில் வலம்வந்து எம் முன்னிற்போர்க்கே இக்கனி உரித்தாம் என்று அருளினர். அதுகேட்ட விக்நேஸ்வரர் மௌனமாய் யோசித்துக்கொண்டிருக்கும்வேளையில், தேவசேனாதிபதியும் சூரசம்ஹாரனுமாகிய சுப்பிரமணியர் தமது பசிய மயில்வாகனத்தில் ஆரோகணித்து உலகைவலம்வரத்தலைப்பட்டனர். அதுபோது கணாதிபதியாகியமூத்த பிள்ளையார் தமது தாய் தந்தையர்களாய லோகோற்பவ மூல பரம் பொருளாகிய பரமசிவத்தையும் பராசத்தியையும் வலம் வந்து துதித்து "உலகம் யாவும் நீங்களே" என்று உண்மை எடுத்துக்காட்டிக் கனி பெற்று களிப்பெய்தி இருந்தனர், அதுகண்ட கந்தக்கடவுள் வெகுண்டு சரேலெனக் கீழிறங்கித் திருவாவினன்குடித் தலத்திற்கு எழுந்தருளிவிட்டனர்.

 172435 

திரு—இலக்ஷுமி ஆ காமதேனு இனன்—சூரியன். (ஆகிய மூவரும் ஒருகால்) குடி—நிலையாக, பரமனைக்கோரி தவம் செய்ததால் இத்தலத்திற்கு திருவாவினன்குடி என்ற நாமம் உண்டாயிற்று.

26:38:2119580

கூறுடை யாறுங் குன்றக் குணப்பெரங் குன்று ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப் பெயரது மருவி யெங்கள்
ஆறுமா முகவன் வைகு நகரமு மன்று தொட்டு
வீறுதோல் பழநீ யென்றே விளம்பின வுலக மூன்றும்

பழநி:—தம்மிளங்குமரன் ஊடலைத் தீர்க்கக்கருதிப் பார்வதி பரமேஸ்வரர்கள் குமரனைப்பின்தொடர்ந்து திருவாவினன்குடியடைந்தனர்- அடைந்த பரமன் முருகவேளை அன்புடன் நோக்கித் தமது திருவாக்கால் "பழம் நீயே" என்றருளிய காரணத்தால் இத்தலத்திற்கு பழநி என்ற திருநாமம் உண்டாயிற்று ஆண்டவருக்கு பழங்கலந்த பஞ்சாமிர்த அபிஷேகம் சதா நடைபெற்று வருவதற்கும் இதுவே காரணமென்பர்.

609
R94·535

சத்திகிரி சிவகிரி:—பர்வதராஜகுமாரியாகிய பார்வதியம்மையார் திருக்கல்யாணத்தின்போது தென்கோடுயர்ந்து வடகோடுதாழ்ந்தது அக்காலை பரமன் ஆக்ஞைப்படி பொதிகைக்குக் குறுமுனி என்னும் அகத்தியமுனிவர் சென்று சமம்செய்து அங்கிருந்தே திருக்கல்யாண காட்சியும் கண்டானந்தித்தனர் அச்சமயம் லோகோபகாரமாக உதவ வல்ல கைலையங் கிரியிலுள்ள மஹா சஞ்சீவி மூலிகைகள் நிறைந்த சத்திகிரி சிவகிரி என்னும் இரு சிகரங்களையும் திருக்கல்யாண ஞாபகார்த்தமாகப் பரிசு பெற்று அதைத் தம்மிருப்பிடத்திற்கு கொண்டுவரத் தம் சிஷ்யனாகிய இடும்பனை ஏவினர். குருமுனி உத்திரவுப்படி இடும்பன் இருகிரிகட்கும் மத்தியில் தண்டாயுதத்தை செலுத்திப் பிணைத்து காவடியாகக் கட்டிச் சுமந்து கொண்டு பொதிகை செல்லும்வழியில் இத்தலத்தைஅடைந்தான் அப்போது களைப்பெய்தியிருந்தமையால் கட்டமுதுண்ணக்கருதி காவடியைஇங்குஇறக்கினான்.

முருகன் திருவிளையாடல்:—உடனே அசுர சம்ஹாரனை முருகப்பிரான் தனக்குகந்த சிவகிரி முடியில் ஆரோகணித்ததைக் கண்ட இடும்பாசுரன் கோபமுண்டு, போர் தொடுத்தும் வெல்ல முடியாமல் அகஸ்தியர்க் கபயமென்று மூர்ச்சித்தான் அதுகண்ட அகஸ்தியர் தன் சிஷ்யனுக்கேற்பட்ட அவஸ்தையைப் பொறாதவராய், சுவாமி ஞானபண்டிதனென்று தெரிந்தும் ககன குளிகையைக்குருநாதனிடமே கொடுத்துப் பரிசோதிக்க சுப்ரமணியமும் புன்சிரிப்புடன் உட்கொண்டு அதையே திரும்ப வியர்வை ரூபமாகத் தமது திருமேனியிலிருந்து திரட்டி ஓய் அகத்தீஸ்வரரே நாம் முன் உமக்கு உபதேசித்த முறைகளில் சிரேஷ்டமானது நமக்கு ஈய்ந்தீர் அதிலும் விசேடமானது தற்பொழுது ஓர் முறை உமக்கருள்கிறோமென அகஸ்தியரும் பெற்று உடனருந்தத்தாம் சுவாமியை மதியாது ககனமார்க்கமாகக்கொண்டு செல்லத்தக்க குளிகையை கொடுத்தும் சுவாமியை அது ஒன்றும் செய்யாமல், சுவாமி தமக்கு கொடுத்தது தம்மையே (அகஸ்தியரையே) வாயு வருண, அக்கினி மண்டலங்களில் தள்ளி தத்தளிக்கச் செய்தது.

அருள்:—அகஸ்தியர் அவஸ்தைப்பட்ட பின்னர் நிதானமும் பூர்வக்ஞானமும் உதிக்கப்பெற்றார். பின்பு சுவாமிமேல் ஆறெழுத்தந்தாதி ஒன்று பாடிக்கொண்டே இறங்கி பாட்டினிறுதியில்பூமியையடைந்து சுவாமியைப் பன்முறை மன்றாடிப் பிரார்த்தித்து தாமும் தம் சிஷ்யனும் செய்த அபசாரங்களினின்றும் விடுபட்டு அருள் பெற்றனர். அதுபோல்இன்றும் பக்தர்கள் பெரும்பாலும் சுவாமிக்கு கொண்டுவரும் அபிஷேக சாமான்களை இடும்பனைப்போல்க் காவடியாகக்கட்டிக்கொண்டுவந்து சுவாமிக்கு காணிக்கையாகச் செலுத்துவதும், அகஸ்தியருக்கு அன்று சுவாமி திருமேனிப் பிரசாதம்கொடுத்ததன்மூலம் அருள் பெறச் செய்தது போல்இன்றும் பக்தர்கட்கு திருவிழா பூஜைக்குமுன் விஸ்வரூப தரிசனமும் திருமேனி தீர்த்தப் பிரசாதமும் கொடுத்து அருள் புரிதலுமே சான்றென்பர்.

### ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி பிரதிஷ்டையும் போகர்சமாதியும்:-

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய போகர் காமசுந்தரியைப் புணர்ந்த தோஷம் நீங்க சுப்பிரமணியப் பிரதிஷ்டை செய்து பூஜித்து அருள்பெறக் கருதி இவ்விடம் வந்து மலைமேல் தம் சித்து வல்லமையால் நவ பாஷாணத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருவுருவம் அமைத்து பூஜித்து, அருள்பெற்று அஷ்டமாசித்துகள் ஆடி முடிவில் மலைமேல் சமாதி ஆயினர். பின்னர் போகர் சிஷ்யர் புலிப்பாணி பாத்ர உடையார் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியைப் பூஜித்து வந்து சமாதியாயினர். அதன்பின் சைவப்பண்டாரங்கள் பெருமானை பூஜித்து வரலாயினர்.

அண்ணலம் பதிகடம்பில் ஆவினன் குடியுமாடுந்
தண்ணமர் நதிகடம்பில் ஷண்முக நதியும்போற்றும்
எண்ணருந் தேவர்தம்மில் முருகனு மேற்றமென்ற
நண்ணியப் பதியிலாடி நவின்றநர் சிப்போர்முத்தர்

ஷண்முகநதி:—பழநிமலைத் தொடரில் தெற்கே உற்பத்தியாகும் ஆறு நதிகள் பலவாறு ஓடிவந்து முடிவில் இத்தலத்தில் ஆறும் ஒன்று சேர்ந்து ஷண்முகநதி யென்ற நாமத்துடன் பிரவாகிக்கின்றன.

பழநித்தலப் பெருமையே பெருமை:—இவ்வித மஹா விசேஷ மகிமைகள் சொல்லப்புகின் கணக்கிலடங்கா. அதுபற்றியன்றோ அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் "அதிசயமனேகமுற்ற பழநிமலை மீதுதித்த பெருமானே" என்றும் "காசியின் மீறிய பழநியில் மேவிய பெருமானே" என்றும் பாடியுள்ளார்.

ஆறநா புரவடியு முடிமிசையோன் மிக்குடுமி யழகு மந்தண்
சோலவோர் காணுமொக்கல் சேர்த்தியநோர் காணுமெழில் சிறக்க
பாரணு திபர்விபுதர் பாவுசிவ கிரிவருபச் சிமத்து வாரச் [மென்றாப்
சோர்கோ னுலயத்து ணின்றிலகு பாஞ்சுடரைச் சிந்தை செய்வாம்.

ஆலயத் திருப்பணியும் அஷ்டபந்தன கும்பாபிஷேகமும்:—ஒரு சேரராஜன் வேட்டைமார்க்கமாக இத்தலம் அடைந்து சுவாமி தரிசனம் செய்தமாத்திரத்தில் விசேஷ ஆலயத்திருப்பணி செய்ய மன

ங்கொண்டு, கனக, ரத்ன, கசித, கலச, கிரண, சோபித, சிகர கோபுர, ஸ்தூபி, விமான, கற்பக்ரஹார்த்த மஹாநவரங்க வாத்ய மண்டபாலங்கிர்தப் பிரணவாஹாரத் திருக்கோவிலொன்று தெய்வ தச்சனுதவிகொண்டாக்குவித்து சோபான விசித்ர ப்ரகாசமாய் விளங்காநின்ற, திருப்பழனிமலை நிலயத்துள் தேவகின்னர கருட காந்தர்வ, சித்தவித்யாதர, முனிகண, சேவித, கீதகோஷ்டிகள் நிறம்பிய, பக்தகோடிகள் சூழ, திருவோலக்கங் கொண்டெழுந்தருளிய, சின்மய சச்சிதானந்த தண்டாயுதக் கடவுளுக்கு, அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகமும் செய்து, வைத்து சுவாமிக்கு ஆறுகால பூஜைக்கும் வேண்டிய மானியங்கள் தானசாசனமாக ஸ்ரீ நைனுப் பண்டாரம் வசம் செய்துகொடுத்து, அச்செய்தியை சிலாசாசனமாக கர்ப்பக்ரஹச் சுவரிலும் கல்வெட்டுச் செய்து வைத்துளன். அதன் பிரதி சென்னை சர்க்கார் ஆர்க்யாலஜி (Archeology) ஆபீசிலும் உளது. பின்பொரு சமயம் பாண்டியநாட்டரசராகிய திருமலைநாய்க்கரின் மந்திரி தளவாய் ராமப்ப அய்யர் இங்கு தரிசனார்த்தம் வந்து பிராம்மணரல்லாத சைவப் பண்டாரங்களிடம் தீர்த்தப் பிரசாதம் வாங்க அருவருப்புக்கொண்ட காரணத்தால் ஓர் அவஸ்தைக்குளாகி உண்மை உணர்ந்தபின் தமது குற்றத்திற்கு கழுவாயாக அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்து வைத்துப் பின்னும் சைவ பூஜகர்களான பண்டாரங்களிடம் பிராம்மணர்களும் தீர்த்தப் பிரசாதங்கள் வாங்க நேரிடுவது பொருதவராய் நான்கு பிராம்மணர்களை ஷ்டி சைவர்களுக்கு உதவியாக இருந்து பிராம்மணர்களுக்குத் தீர்த்தப் பிரசாதம் கொடுக்க ஏற்படுத்தி ஆலய விஷயமான சகல பொறுப்புகளும்பாத்தியதைகளும்முன்போன்றே சைவப் பண்டாரங்களுக்கே உரியனவென ஏற்பாடு செய்ததுடன் மேலும் தான் அவர்கட்கு சூப்ரென்டெண்ட் பவரும் கொடுத்ததாக உத்தரவு செய்தார். இதன்விபரம் மதுரைடிஸ்டிரிக்ட் மேன்யூலில் சென்னை கவர்மெண்ட் பிரசில் பிரசுரித்துளது.

கந்தநிற் பூசை யோர்நாட் கடிநக ரிதனி லாற்றில்
இந்துமா ஞால மாதி புவனங்க டோறுமெஞ் ஞான்றும்
வந்தனை புரியி லுண்டாம் பலனெய்து மனுவோன் றிங்கன்
சிந்தனை புரியி லோரேழ் கோடியுஞ் சித்தி யாமால்.

பக்தர்கள் பெறும் பேறு:—மக்கட்குண்டாகும் இகபர சுக வாழ்வு கருதியே ஆலய வழிபாட்டை ஆன்றோர் நிருவினர் என்பதற்கு இப்புராதன புண்ணிய க்ஷேத்திரத்தில் யாவரும் கண்கூடாய் அறியத்தக்க அநேக சான்றுகளுளன. ஒரு பக்தன் தீராத கொடிய பாவகர்ம ரோகங்களாலும் மற்றும் வறுமையாலும் பீடிக்கப்பட்டவனெனினும் இக்ஷேத்திரத்தில் அரை அல்லது ஒரு மண்டலம் தங்கி பக்திபூர்வமாக அதிகாலையில் சண்முகநதியில் நீராடி சஞ்சீவிக்காற்று தன் உடம்பில் படும்படி கிரிப்பிரதக்ஷிணம் செய்து மலையேறி சுவாமி தரிசனம் செய்து பிரார்த்தித்து போகரிஷியால் நவபாஷாணக் கட்டுக் கொண்டு அமைத்துப் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ தண்டபாணியின் அற்புதத் திருமேனியில் அபிஷேகித்துப் படிந்துள்ள பிரசாதங்களை உட்கொள்ளுவானாகில் தன் பூர்வகர்மத்தாலாய கொடிய ரோகமுந் தீர்ந்து சுகதேகியாய்த் திடசரீர ஆரோக்யமும், சத்புத்திர சந்தானமும், தனலாப சம்பத்தும், சர்வாபீஷ்ட மனோரத இஷ்ட சித்தியும், வித்யாபிவிர்த்தியும் மென்மேலும் பெற்று இகபர சுகவாழ்வு வாழ்வனென்பது பிரத்தியக்ஷ அனுபவமான உண்மை இவற்றிற்கு மேலான சிவஞானமும் பதமுத்தி பரமுத்திப்பேறுகளும் வேண்டும் சிறந்த அன்பர்க்கட்கு அவற்றையும் தந்தருளுவன் நம் பழநி ஆண்டவன் இக்கலியுகத்திற் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் பழநிக் கந்தவேளின் பெருமை அளப்பிடமுடியா அருமையுடையது.

சிவகிரி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமினே நமஹ;

சுபம்.

# முகவுரை.

"பழநித் தலபுராணம்' என்னும் செய்யுள் வடிவாயுள்ள அரிய நூல் சாங்கோபாங்கமாகப் பழநியின் சம்பந்தமான பெருமைகளை விளக்குகின்றது. அதற்கு இந்நாளில் தமிழுக் குறைவிடமெனத்திகழும் யாழ்ப்பாணத்து மகா வித்துவான், நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் உரைகண்டுள்ளார். அது வெகுகாலத்திற்கு முன்பே பெரிய புத்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. அப்படியிருக்க யான் இச்சிறு நூலொன்றை வெளியிட நேர்ந்த காரணம் யாதெனில், தற்காலப்போக்கில் பெருநூல்களைப் பலரும் படிக்க இயலாதிருப்பதும் பழனியின் மகிமையை சிறிதளவேனும் பலருமுணர வேண்டுமென்று எனக்குற்ற ஆவலுமாகும். இதனைப் படிப்போர்கள் தலபுராணத்தை முழுவதும் படிக்கவேண்டுமென்பது என் வேணவா.

முருகவேளடியார்களுக்கு இன்னமுதமாய் உதவவல்ல அருட்பாடல்கள் சிலவற்றையும் இதிற் சேர்த்துள்ளேன்.

அன்பினால் அடியேன் வெளியிடுமிந் நூலின்கண்ணுள்ள குற்றங் குறைகளை அறிஞர்கள் பொறுத்தருள்வார்களாக.

பழநி,<br>1933.

P. நடராஜ பண்டாரம்,<br>மலைக்கோவில் அயன் மிராஸ்.

# பாடல் திரட்டு.

## திருப்புகழ்,

### நூற் சிறப்பு

ஆனைமுக வற்கிளைய ஐயா அருணகிரி
தேனனைய சொல்லான் திருப்புகழை—யானினைந்து
போற்றிடவு நின்னைப் புகழ்ந்திடவும் பொற்கமலஞ்
சாற்றிடவு மோதிடவுந் தா.

வேதம்வேண் டாம்சகல வித்தைவேண் டாம்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்.

சீராந் திருப்புகழைச் செவ்வேள்மே லன்பாக
ஆராய்ந் துரைத்தா னருணகிரி—நேராக
அந்தப் புகழை யநுதினமு மோதாமல்
எந்தப் புகழோது வீர்.

### நூற் பயன்.

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினர்க் காமேயிக் கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புசழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்புக மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்றபெரு மாளே.

ஓராறு மாமுகனும் உச்சிதமெய்ஞ் ஞானகுகன்
போரா லருணகிரி பேருலகில்—சீராரும்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
எத்தினவ ரீடேறு வார்.

ஒலிகட்கெல்லாம் அகரம்முதல் அதுபோலஉலகங்கட்கெல்லாம் கடவுள்முதல்

அருணகிரி நாதர்பதி னாறா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதிர் — பரகதிக்கஃ
தேணி யருட்கடலுக் கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்க
திருப்புகழை நித்தஞ் செபிக்கத் — திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
செர்ச்சிக்க லாமே செகூ.

## கணபதி துதி

உம்பர் தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

## சுப்பிரமணியர் துதி.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே,

## நூல்.

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

கற்றதன் பயன் கடவுளை வணங்குதலே.

பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## திருப்பரங்குன்றம்.

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில்வந்து தித்துக் குழந்தை வடிவாகி

கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச் சதங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி

அரியபெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

இரவியிந்த்ரன் வெற்றிக் குரங்கி
அரசரென்று மொப்பற்ற வுந்தி
இறைவ னெண்கி னக்கர்த்த னென்றும் — நெடுநீலன்

எரியதென்றும் ருத்ரற்சிறந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து — புனமேவ

அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் — மருகோனே

அயனை யும்பு டைத்துச் சினந்து
உலகமும்ப டைத்துப் பரிந்து
அருள் பரங்கி ரிக்குட் சிறந்த — பெருமாளே.

## திருச்செந்தூர்.

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி — உழலாதே

முந்தைவினை யேவ ராமற்போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு — முனைமீதே

திந்தி திமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத்தோடு — நடமாடும்

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது — வருவாயே

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார — முடிமேலே

இறைவனது புகழை விரும்பினவரிடத்து அறியாமை சேர்ந்த இருவினைகளும் பொருந்தமாட்டா.

அஞ்சலிசெய் வோர்கள் நேயக்கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார — எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார — எதிரான
செஞ் சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில் நகர்வாழு மாண்மைக் கார — பெருமாளே

## திருவாவினன்குடி. (பழநி).

நாத விந்துக லாதி நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம — வெகுகோடி.
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம — பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம — கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம — அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு — மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக — வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி — லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் — பெருமாளே.

---

கடவுளை வணங்காத தலைகள் தமக்குரிய தன்மையிற் குறைபாடு உடையனவே யாம்.

## திருவேரகம் (சுவாமி மலை.)

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணி பொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுக்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலைமீ துதித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே

---

## பழமுதிர்சோலை.

வாதினையடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயிலென்ப தறியேனே
நாதமொடு விந்து வான வுடல்கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே

சோதிபுணர் கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே.

---

## குன்றுதோறாடல்.

தறையின் மானுட ராசையி னல்படல்
எழுதுமாலருள் மாதர்கள் தோதக
சாசர் மாமல ரோதியினவிரு கொங்கையாலும்

தளர்மினேரிடை யாலுடை யால்நடை
அழகி னல்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ

பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணாவனை நீடுமிராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்

பகரொ ணாதது சேரவொ ணாதது
நினையொ ணாதது வானத யாபர
பதிய தானச மாதி மனோலயம் வந்துதாராய்

சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேளத யாபர அம்புராசி

திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்

மறவர் நாயக ஆதிவி நாயகர்
இளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக ஆனைந னாயக எங்கள்மாலின்

மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே.

---

எவ்வுயிரிடத்தும் அன்புடையவரே அந்தணர்.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே.

---

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர் செய் குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்த நின
செயலே விரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துன்பகலை
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ பொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விசேகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திரல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவினன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

---

இபிர வுத்தி யனைய நாக சென்னன் மகனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிறையும் வரவே நின்
அருள தருளி யெனையு மனதொ டடிமை கொளவும் வரவேணும்

---

அறம் பேரின்பத்தையும், செல்வத்தையும் கொடுத்தலால் அதனைவிட
மேலான செல்வம் மக்கட்கு இல்லை.

சமராமுகவெ லசுரர் தமது தலைக ளுருள மிகவேநீள்
சலதியலற நெடிய பதலை தகர அயிலை விடுவோனே

வெமரவணையி னினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி விரவும் அமரர் பெருமானே.

---

அருகிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளியதாய் நின்றநிட்கள சொரூபமுத லொருவாழ்வே

ஆரியநிலை யேகண்ட முத்தரித யாகமலை
மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய உணராதே

கருவிஇரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவரி யாவஞ்ச கக்கபட மூடிபுடல் வினைதானே

கலைகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு மாயெஞ்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன தருள்தாராய்

ஒருநியம மேவிண்ட சடசமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடனுணர்வ தாயெங்கு முற்பனம தாகஅம ருளவோனே

உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா

பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றி மயிலேறுமொரு திறலோனே

பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று வற்காமு மாகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர் பெருமானே.

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய   வரையேறி
நாவின்ப ரசமு லான ஆநந்த அருவி பாய
நாதங்க ளோடுகு லாவி   விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாமல்
ஓமங்கி யுருவ மாகி   இருவோரும்
ஓரந்த மருவிஞான மாவிந்தை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட   அருள்தாராய்
தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை   ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாதன்   அருள்பாலா
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு   முருகோனே
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமளி சேர்வை
காணங்கள் பழநி மேவு   பெருமாளே.

## கதிர்காமம்.

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப்   பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறுபாடல்
தெரிதரு குமாரப்   பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மாகதம யூரப்   பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப்   பெருமாள்காண்
அருவரைகள் நீறுபட அசுரர் மாள
அமர்பொருத வீரப்   பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப்   பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப்   பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப்   பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

—(‿)—

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநேடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செயப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிச் சமகூரன்
புளமேவல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமெ ணுமற் றிரிவாரும்
நீதகல வோதிப் பணியாரும்
நீரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யெநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே.

பொறாமை, அவா, சினம், கடுஞ்சொல் என்ற நான்கும் கடிந்து செய்வதே அறம்

# திருவருட்பா.

சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ்விளக்கே
தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே யென்ன ருயிருக் கொருதுணையே
போரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப்
பேசுகின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே.

## ஸ்ரீ பழநி ஆண்டவர் கும்மி.

1. குறவர் குடிசை நுழைந்தாண்டி—அந்தக்
கோமாச்சி யெச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி—அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி.

2. மாமயி லேறி வருவாண்டி—அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமை யிலாத புகழாண்டி—அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி.

3. பன்னிரு தோள்க ளுடையாண்டி—கொடும்
பாவிகள் தன்னை யடையாண்டி
என்னிரு கண்க ளனையாண்டி—அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுங்கடி.

4. வேங்கை மாமாகி நின்றாண்டி—வந்த
வேடர் தமையெலாம் வென்றாண்டி
தீங்கு செய் சூரனைக் கொன்றாண்டி—அந்தத்
தீரனைப் பாடி யடியுங்கடி.

---

நாளை என்னாது அறத்தை இன்றே செய்யின் அஃது இறக்கும் காலத்து அழியாத் துணையாகும்.

5. சீர்திகழ் தோகை மயின்மேலே—இளஞ்
செஞ்சுடர் தோன்றும் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான்—வரும்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள்.

6. ஆறு முகங்களிற் புன்சிரிப்பும்—இரண்
டாறு புயந்திக ழற்புதமும்
வீறு பரஞ்சுடர் வண்ண முமோர்—திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள்.

7. ஆனந்த மான வமுதனடி—பர
மானந்தக் காட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி—சிவ
ஷண்முக நங்குரு சாமியடி.

8. வேதமுடி சொல்லு நாதனடி—சதுர்
வேதமுடி திகழ் பாதனடி
நாத வடிவுகொ ணீதனடி—பர
நாதங் கடந்த நலத்தனடி.

9. தத்துவத் துள்ளே யடங்காண்டி—பர
தத்துவ மன்றித் தொடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி—சிவ
ஷண்முக நாதனைப் பாடுங்கடி.

10. சச்சிதா னந்த வுருவாண்டி—பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதா முன்பர்க் குறவாண்டி—அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி.

11. அற்புத மான வழகனடி—துதி
அன்பர்க் கருள் செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி—அந்தச்
சேவகன் சீர்த்தியைப் பாடுங்கடி.

12. சைவந் தழைக்கத் தழைத்தாண்டி—ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி
பொய்வந்த உள்ளத்திற் போகாண்டி—அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி.

---

இல்லற வாழ்க்கையில் முறைப்படி வாழ்பவன் தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான்.

13. வாசி நடத்தித் தருவாண்டி...ஒரு
வாசியி லிங்கே வருவாண்டி
ஆசில் கருணை யுருவாண்டி...அவன்
அற்புதத் தாண்மல ரேத்துங்கடி

14. இராப்பக லில்லா விடத்தாண்டி...அன்பர்
இன்ப வுளங்கொ ணடத்தாண்டி
அராப்பளி யிந்த திடத்தாண்டி—அந்த
அண்ணலைப் பாடி யடியுங்கடி

15. ஒன்றிரண் டான வுளவாண்டி ...அந்த
ஒன்றிரண் டாகா வளவாண்டி
மின்றிரண் டன்ன வடிவாண்டி...அந்த
மேலவன் சீர்த்தியைப் பாடுங்கடி.

## கந்தர் சரணப்பத்து

1. அருளா ரமுதே சரணஞ் சரணம்
அழகா வமலா சரணஞ் சரணம்
பொருளா வெனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணஞ் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணஞ் சரணம்
மயில்வா கனனே சரணஞ் சரணங்
கருணா லயனே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

2. பண்ணோர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணஞ் சரணம்
விண்ணோ ரொளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணஞ் சரணம்
உண்ணோருயிரே யுணர்வே சரணம்
உருவே யருவே யுறவே சரணங்
கண்ணே மணியே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

…ரேசவையில் சிறப்படையச்செய்தலே தந்தை மகனுக்குச்செய்யுங்கடன்

OF THE REGISTR 9 AUG 19 MADRA

3. முடியா முதலே சரணஞ் சரணம்
முருகா குமரா சரணஞ் சரணம்
வடிவே லரசே சரணஞ் சரணம்
மயிலூர் மணியே சரணஞ் சரணம்
அடியார்க் கெளியாய் சரணஞ் சரணம்
அரியாய் பெரியாய் சரணஞ் சரணங்
கடியாக் கதியே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

4. பூவே மணமே சரணஞ் சரணம்
பொருளே யருளே சரணஞ் சரணம்
கோவே குகனே சரணஞ் சரணங்
குருவே திருவே சரணஞ் சரணங்
தேவே தெளிவே சரணஞ் சரணஞ்
சிவஷண் முகனே சரணஞ் சரணங்
காவே தருவே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

5. நடவுந் தனிமா மயிலோய் சரணம்
நல்லார் புகழும் வல்லோய் சரணந்
திடமுந் திருவுந் தருவோய் சரணந்
தேவர்க் கரியாய் சரணஞ் சரணந்
தடவண் புயனே சரணஞ் சரணந்
தனிமா முகலே சரணஞ் சரணங்
கடவுண் மணியே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

6. கோலக் குறமான் கணவா சரணங்
குலமா மணியே சரணஞ் சரணஞ்
சீலத் தவருக் கருள்வோய் சரணஞ்
சிவனார் புதல்வா சரணஞ் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் லொளியே சரணங்
காலற் றெறுவோய் சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

7. நங்கட் கினியாய் சரணஞ் சரணந்
நந்தா வுயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையான் மகனே சரணஞ்
சிவன்தந் தருளம் புதல்வா சரணந்
துங்கச் சுகநன் றருள்வோய் சரணஞ்
சுரர் வாழ்த் திடுநந் துரையே சரணங்
கங்கைக் கொருமா மதலாய் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

8. ஒளியுள் ளொளியே சரணஞ் சரணம்
ஒன்றே பலவே சரணஞ் சரணந்
தெளியந் தெருளே சரணஞ் சரணஞ்
சிவமே தவமே சரணஞ் சரணம்
அளியுங் கனியே சரணஞ் சரணம்
அமுதே யறிவே சரணஞ் சரணங்
களியோன் றருள்வாய் சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

9. மன்னே எனையாள் வரதா சரணம்
மதியே யடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணஞ் சரணம்
புகழ்வா ரிதயம புகுவாய் சரணம்
அன்னே வடிவே லரசே சரணம்
அறுமா முகனே சரணஞ் சரணம்
கன்னேர் புயனே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

10. வேதப் பொருளே சரணஞ் சரணம்
விண்ணோர் பெருமான் சரணஞ் சரணம்
போதத் திறனே சரணஞ் சரணம்
புனமா மயிலோம் சரணஞ் சரணம்
நாதத் தொலியே சரணஞ் சரணம்
நாவையில் லவனே சரணஞ் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

---

பழுங்குகற்கு இன்சொல் கனிபோலவும் இன்னாச்சொல் காய்போலவு மிருக்கின்றன.

## தெய்வமணி மாலை.

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருட்
டிறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க வறிவோங்கி நிறைவான வின்பந்
திகழ்ந் தோங்க வருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வனமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி யானந்த
வடிவாகி யோங்கி ஞான
உருவோங்கு முணர்வினிறை யொளியோங்கி யோங்குமயி
லூர்ந்தோங்கி யெவ்வுயிர்க்கும்
உறவோங்கு நின்பதமெ னுளமோங்கி வளமோங்க
வுய்கின்ற நாளெந்த நாள்
தருவோங்கு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகக் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

பரமேது வினை செயும் பயனேது பதியேது
பசுவேது பாசமேது
பத்தியே தடைகின்ற முத்தியே தருளேது
பாவ புண்யங்க ளேது
வரமேது தவமேது விரதமே தொன்றுமிலை
மணவிரும் புணவுண் டுநல்
வத்திரம ணிந்துமட மாதர்தமை நாடி நறு
மலர்சூடி விளையாடி மேற்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவமொடு
கலந்துமகிழ் கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெ னுங்
கயவரைக் கூடா தருள்
தரமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

17242

## போற்றித் திருவிருத்தம்.

கங்கையஞ் சடைசேர் முக்கட் கரும்பருண் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி யருட்பெருங் கடலே போற்றி
பங்கையன் முதலோர் போற்றும் பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளுந் தெய்வச் சரவண பவனே போற்றி.

வேதமுங் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமுங் கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி
போதமும் பொருளு மாகும் புனிதநின் பாதம் போற்றி
ஆதர மாகி யென்னு ளமர்ந்தவென் னரசே போற்றி.

என்னிரு கண்ணின் மேவு மிலங்கொளி மணியே போற்றி
பன்னிரு படைகொண் டோங்கும் பன்னிருகரத்தோய்போற்றி
மின்னிரு நங்கைமாருண் மேவிய மணாள போற்றி
நின்னிரு பாதம் போற்றி நீள்வடி வேல போற்றி.

விதமி சைந்தினி தாமலர் மாலைகள்
குழல ணிந்தநு ராகமு மேசொலி
விதர ணஞ்சொலி வீறுக ளேசொலி — அழகா

விரிகு ரும்பைக ளாமென வீறிய
கனக சம்ப்ரம மேருவ தாமதி
விரக மொங்கிய மாமுலை யாளெதிர் — அமர்நாடி

இதமி சைந்தன மாமென வேயின
நடைந டந்தனர் வீதியி லேவர
எவர்களுஞ்சித மால்கொளு மாதர்கள் — வலையாலே

எனது சிந்தையும் வாடிவி டாவகை
அருள்பு ரிந்தழ காகிய தாமரை
இருப தங்களி னொல்லை யாள்வதும் — ஒருநாளே

மதமி சைந்தெதி ரேபொரு சூரனை
உடலி ரண்டுகூறாய்விழ வேசின
வடிவு தங்கிய வேலினை யேவிய — அதிதீரா

மதுர இன்சொலி மாதுமை நாரணி
கவுரி அம்பிகை யாமளை பார்வதி
மவுன சுந்தரி காரணி யோகினி — சிறுவோனே

மதமி சைந்தெழு லோகமு மேவலம்
நொடியில் வந்திடு மாமயில் மீதொரு
பவனி வந்தக்ரு பாகர சேவக — விறல்வீரா

பருதி யின்ப்ரபை கோடிய தாமெனும்
வடிவு கொண்டருள் காசியின் மீறிய
பழநி யங்கிரி மீதினில் மேவிய — பெருமாளே.

நடுவுநிலைமை யின்மையால் வரும்பொருளை விரும்பலாகாது.

## புண்ணிய நீற்று மான்மியம்.

திவசங்கடொ றுங்கொண்டிரு தீமைப்பிணி தீரும்
பவசங்கட மறுமிவ்விக பரமும்புகழ் பரவுங்
கவசங்களெ னச்சூழ்ந்தறு கண்ணேறது தவிருஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே

மாலேந்திய குழலார்தரு மயல்போமிட ரயல்போங்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்
மேலேந்திய வானோர்கண் மெலியாவித மொருசெவ்
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே

தவமுண்மையொ டுறும்வஞ்சகர் தஞ்சார்வது தவறும்
நவமண்மிய வடியாரிட நல்குந்திறன் மல்கும்
பவனன்புனல் கனன்மண்வெளி பலவாகிய பொருளாஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே

துயிலேறிய சோர்வுங்கொடுந் துயரங்கெடு நடுவன்
கையிலேறிய பாசந்துணி கண்டேமுறித் திடுமால்
குயிலேறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும்
மயிலேறிய மயிலேயென வளர்நீறணிந் திடிலே

தேறுப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறுப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீறுப்பொடு வருசூர்முடி வேறாக்கிட வருமோர்
ஆறுக்கரப் பொருளேயென வருணீறணிந் திடிலே.

## மயில் வகுப்பு.

—:o:—

ஆதவனு மம்புலியு மாசுறவி ழுங்கியுமி ழாலமரு ளும்பணிபி,
ளண்டு மழுதே
ஆறுமுக னைந்துமுக ஞானமுக னெங்கடவு ளாமெனமொ
ழிந்தகலை, வென்று விடுமே
ஆர்கலிக டைந்தமுது வானவ ருந்தவரு ளாதிபக வன்றுயில,
னந்தன் மணிசேர்
ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி யாகமுழு துங்குலைய
வந்த னையுமே
வேதமுழு தும்புகலி ராமனொரு தம்பிமிசை விடணன ருந்த,
மையன், மைந்த னிகலாய்
வீசுமா வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன் மேலிடி யெனும்
படிமு, ழங்கி விழுமே
மேதினிசு மந்தபெரு மாசுணம யங்ககக மேவுசர ணங்கொடுல,
கெங்கு முழுமே
வேலியென வெண்டிசையில் வாழு முரகந்தளர வேயழலெனுஞ்
சினமு டன்ப டருமே
போதினிலி ருந்தகலை மாதினை மணந்தவயர் போதனை யிரந்து
மலர், கொண்டு முறையே
பூசனைபு ரிந்துகொடி யாகிமகி ழொன்றுதுகிர் போன்முடிவி
ளங்கவரு, மஞ்ச மடுமே
பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர் பூரணக ணங்க
ளொடு, வந்து தொழவே
போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர் போயினமெ
னும்படியே, திர்ந்து விழுமே
கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில் கோலவுட
லங்கருகி வெந்து விழவே
கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள் கூடிமன மஞ்சி
வளை, சென்று புகவே
கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு கோழியொடு
வென்றிமுறை, யுப்ப கருமே
கோலமுறு செந்தினகர் மேவுகும ரன்சரண கோகனத மன்
பொடுவ, ணங்கு மயிலே. (திருவகுப்பு.)

---

ஒருவன் நாவடக்கிப் பேசாதொழியின் துன்புறுவன்.

## திருவாவினன்குடி திருமுருகாற்றுப்படை

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்

தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
எமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியகைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்னசெலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்னகுரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில்கொள்கை மந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்று.

## கந்தரநுபூதி.

### காப்பு.

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

### நூல்.

1. ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

நல்லொழுக்கம் மென்மேலும் நன்மையைத் தரும், தீயொழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்.

2 உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே

3 வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே

4 வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே.

5 மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே.

6 திணியா னமனோ சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே.

7 கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

8 அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரக் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

9 மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
றட்டூ டறவேல் சைலத் தெறியு
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே:

அறிவினால் உயர்ந்தோர் உலகத்திற்குப் பொருந்த ஒழுகுவர்.

10 கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

11 கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே.

12 செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.

13 முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

14 கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியா
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.

15 முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே.

16 பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே.

17. யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடைவீர் நடவீ ரினியே.

18 உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலகூ ரபயங் கரனே.

19 வடிவுந் தனமு மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

20 அரிதா கியமெய்ப் பொருளுக் கடியே
னுரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

21 கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

22 காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

23 அடியைக் குறியா தறியா மையினான்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேன் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

24 கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

25 மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வலனே.

26 ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

27 மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா
னென்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே.

28 ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.

29 இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

30 செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா தவெதன வுணர்வித் ததுதா
னவ்வா றறிவா ரறிகின் றதலா
லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

31 பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

32 கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே.

33 சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே.
கந்தா முருகா கருணா கரனே.

செருக்கினால் தீமை செய்தாரைப் பொறுமையால் வென்றுவிடுக.

34 சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லகிர்பா கரனே.

35 விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
றுதியா விரதா சுரபூ பதியே.

36 நாதா குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

37 கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே.

38 ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே,

39 மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின்கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

40 வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

41 சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னோபதே சிகனே.

---

ஒருவனுக்குக் கொடுப்பதைக் கண்டு பொறாமை கொள்கிறவன் உணவும் உடையுமின்றி வருந்துவன்.

42 குறியைக் குறியா தகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடனுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

43 தூசா மணியுந் துகிலும் புனைவா
ளேசா முருகா நினதன் பருளா
லாசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.

## கந்தரந்தாதி.

### காப்பு.

வாரணத் தானை யயனைவிண்
ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென்
றோனைமைந் தனைத்துவச
வாரணத் தானை துணைநயந்
தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட
யானையை வாழ்த்துவனே.

உன்னை முலையுமை மைந்தா
சரணம் பாருயிர்சேர்
உன்னை முலையுமை மைந்தா
சரண மருணைவெற்பாள்
உன்னை முலையுமை மைந்தா
சரணந் தனமுமொப்பில்
உன்னை முலையுமை மைந்தா
சரணஞ் சரணுனக்கே.

நூல்.

திருவாவி னன்குடி பங்காள
ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானோர்
பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங்
குன்றுதோ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதன்
கார்வரை செப்புமினே.

சிகைத்தோகை மாமயில் வீரா
சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப்
பொருது திசைமுகன்வா
சிகைத்தோகை மாமயில் வானில்லைத்
தோய்வெஞ் செருமகள்வா
சிகைத் தோகை மாமயில் செவ்விநற்
கீரர் சொற் றித்தித்ததே.

செல்வந் திகழு மலநெஞ்ச
மேயவன் றெய்வமின் னார்
செல்வந் திகழு நமதின்மை
தீர்க்கும்வெங் கூற் றவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில்
வேறினை காத்த செல்வி
செல்வந் திகழு மணவாள
னல்குந் திருவடியே.

---

பிறர் குற்றம்போல் தம் குற்றத்தையும் ஆய்ந்து பார்ப்பவர் தீதொன்றும் செய்யமாட்டார்.

## கந்தரலங்காரம்

### காப்பு.

அடலரு ணைத்திருக் கோபுரத்
தேயந்த வாயி லுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண்
டேன்வரு வார்தலையிற்
றடப டெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கிய கைக்
கடதட கும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே.

### நூல்.

O26:38 · 2195AA

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத
வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட
வாசெஞ் சடாடவிமே
லாற்றைப் பணியை யிதழியைத்
தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன்க்ரு பாகரனே.


### நூற்பயன்.

172435

சலங்கா ணும்வேந்தர் தமக்குமஞ்
சார்யமன் சண்டைக்கஞ்சார்
[illegible]லங்கா நரகக் குழியணு
கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும்
யானைக்குங் கந்தனன்னு
லலங்கார நூற்று ளொருகவி
தான்கற் றறிந்தவரே.


முற்றிற்று.

ஆர். எம். சே, பிரஸ், பழனி,




சுவாமிக்கு கார்த்திகை தோறும் தங்கள் பெயர் நக்ஷத்திரத்தால் அர்ச்சனை செய்து தபால்மூலம் பிரசாதம் அனுப்ப வருடம் 1-க்கு ரூ. 6—12—0

P. நடராஜ பண்டாரம், மலைக்கோவில் அயன்மிராஸ், பழனி



சத்திகிரி என்பது இடும்பன்மலை.

சிவகிரி என்பது சுவாமிமலை.

படத்தில் ஷண்முகநதிஉற்பவிக்கும் பழநிமலைத்தொடருடன் திருவாவினன்குடி சத்திகிரி சிவகிரி யாவும் காணலாம்.